பாழ்படாமல் பாதுகாக்க முடியும். எனவே, அந்த ரெகுலேட்டருக்குக்கீழே, கடலுக்குப் பக்கத்திலே உப்பு நீர் புகாமல் இருக்க தடுப்பணை கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

142—

கால்நடை மருந்தகம்

***5327**—**திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பெருந்தொழுவு ஊராட்சி, கவுண்டம்பாளையத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்லடம் தொகுதி, பெருந்தொழுவு ஊராட்சிக்குட்பட்ட கவுண்டம்பாளையத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். இந்த வினா இங்கு இடம்

2013 ஏப்ரல் 4]

பெறுவதற்கு முன்பாகவே அந்த பெருந்தொழுவு என்ற இடத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியாகிவிட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நித்தம் நித்தம் வணங்கும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். பல்லடம் தொகுதி, பொங்கலூர் ஒன்றியம், பெருந்தொழுவு ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க ஆணையிட்டு சிறப்பித்துக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், பல்லடம் தொகுதி மக்கள் சார்பாகவும் கோடானுகோடி நன்றியை உரித்தாக்கி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2008 ஆம் ஆண்டு எனது அரூர் தொகுதி, நரிப்பள்ளியில் கால்நடை கிளை மருந்தகத்தைத் திறப்பதற்காக அரசாணை வெளியிடப்பட்டு, இதுநாள் வரை திறக்கப்படவில்லை. அரசாணை நிலுவையில் உள்ளது. நரிப்பள்ளியிலிருந்து பெரியப்பட்டி, சிக்கலூர் என 10 கி.மீ. தூரத்தில் வாழக்கூடிய அந்த கிராம மக்களுக்கு தீர்த்தமலை வந்தால் மட்டும்தான், அவர்கள் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி செய்துகொள்ள முடியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்ட நரிப்பள்ளியில் அந்தக் கால்நடை மருந்தகத்தை இந்த ஆண்டாவது திறப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கிராமத்திற்கு 2008 ஆம் ஆண்டு கடந்த ஆட்சியில் ஆணை வழங்கப்பட்டு இதுவரை திறக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இந்தத் துறை ஆய்வு செய்து நிச்சயமாக அதைத் திறப்பதற்கு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சியில் இருக்கக்கூடிய கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னால், 3,000 கால்நடைகள் இருக்க வேண்டும் என்ற விதி இருக்கின்றது. அது 5,000–மாக உயரும்போது, அது கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். அதுவே, 10,000 கால்நடைகளாக உயரும்போது, அங்கே மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும். எனவே, உறுப்பினர் குறிப்பிடுகின்ற கோட்டூர் ஊராட்சியில் உள்ள அந்தக் கால்நடை மருந்தகத்தில் 10,000 கால்நடைகள் அங்கே இருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியினைப் பெற்று, அது மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*